விழாவில், தொழில் துறையின் வளர்ச்சிக்கு குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்களின் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில், மாநில அளவில் சிறந்த தொழில் முனைவோர் விருது, மாநில அளவில் சிறந்த வேளாண்சார் தொழில் நிறுவனத்துக்கான விருது, மாநில அளவில் சிறந்த மகளிர் தொழில் முனைவோர் விருது, மாநில அளவில் தரம் மற்றும் ஏற்றுமதி நிறுவனத்துக்கான விருது, சிறப்பு பிரிவை சேர்ந்த சிறந்த நிறுவனத்துக்கான விருது ஆகிய விருதுகளும், குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு சிறப்பாக நிதி வசதி வழங்கிய 3 வங்கிகளுக்கான விருதுகளையும் முதல்வர் வழங்குகிறார். இந்த விழாவில் முதல்வரால் குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் சார்பில் ரூ.1,723.05 கோடி மதிப்பிலான முதலீடுகளை உறுதி செய்யப்பட்டு, சுமார் 30,000 பேருக்கு இதன்மூலம் வேலைவாய்ப்பும் உருவாக்கப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## பதிவுத்துறை காலிப்பணியிடங்களை

# டிஎன்பிஎஸ்சி மூலம் விரைவில் நிரப்ப நடவடிக்கை

### அமைச்சர் பி.மூர்த்தி தகவல்

● சென்னை

பதிவுத்துறையில் காலியாக உள்ள பணியிடங்களை விரைவில் டிஎன்பிஎஸ்சி மூலம் நிரப்பவும், பொதுமக்கள் காத்திருக்காமல் உடனுக்குடன் பதிவுப்பணிகளை முடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் பி.மூர்த்தி தெரிவித்தார்.

சென்னை நந்தனம், ஒருங்கிணைந்த வணிகவரி மற்றும் பதிவுத்துறை வளாகக் கூட்டரங்கில் பதிவுத் துறை அதிகாரிகள் கலந்து கொண்ட பணி சீராய்வுக் கூட்டம் அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டத்துக்குப் பிறகு, அமைச்சர் மூர்த்தி செய்தியாளர்களிடம் கூறியதாவது:

பதிவு துறையின் வருமானத்தை அதிகரிக்கும் வகையில் முதல்வர் வழங்கிய அறிவுரைகள் அடிப்படையில், தேவையான நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் கட்டிடங்களுக்கு உரிய விலையை நிர்ணயிக்க வேண்டும். நிலுவையில் உள்ள பத்திரங்களை உடனுக்குடன் முடித்து வருவாய் ஈட்ட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பத்திரங்கள் பதியப்படும்போது பொதுமக்கள் அதிக நேரம் காத்திருக்காத வண்ணம் உடனுக்குடன் பத்திரங்களை பதிவு செய்யும் வகையில் 3.0 மென்பொருளை பயன்படுத்தி குறைபாடுகளை களைய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நேர்மையான முறையில் பதிவு நடைபெறும் வகையிலும் இடைத்தரகர்கள் பதிவு நடைபெறும் இடத்தில் இருக்க கூடாது என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

பத்திரப்பதிவுத் துறையில் டிஎன்பிஎஸ்சி தேர்வு மூலம் காலி பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளது. தற்போது காலியாக உள்ள 85 பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பாஜக சட்டப்பேரவை கட்சித் தலைவர் நயினார் நாகேந்திரன், அவருடைய மகன் நயினார் பாலாஜி மற்றும் பத்திரப்பதிவு, வருவாய் துறை அலுவலர் சேர்ந்து சென்னை ஆற்காடு சாலையில் உள்ள ரூ.100 கோடி மதிப்பிலான சொத்தை மோசடியாக பத்திரப்பதிவு செய்ததாக எழுந்துள்ள புகார் குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது. 15 நாட்களில் புகார் மீது அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

# கோவை பெண் ஓட்டுநர் ஷர்மிளாவுக்கு கார் பரிசளித்த கமல்ஹாசன்

### தொழில்முனைவராக பயணத்தை தொடர வாழ்த்து

● சென்னை

கோவையை சேர்ந்த பெண் ஓட்டுநர் ஷர்மிளாவுக்கு புதிய காரை மநீம தலைவர் கமல்ஹாசன் பரிசாக அளித்து, தொழில்முனைவராக அவர் தனது பயணத்தை தொடர வாழ்த்து தெரிவித்துள்ளார்.

கோவையை சேர்ந்த பெண் பேருந்து ஓட்டுநர் ஷர்மிளா. இவர் தனியார் பேருந்தில் பணிபுரிந்து வந்தபோது சமூகவலைதளங்களில் பிரபலமானார். இதையடுத்து சட்டபேரவை உறுப்பினர் வானதி சீனிவாசன் ஷர்மிளா ஓட்டும் பேருந்தில் பயணம் செய்து வாழ்த்துகளை தெரிவித்தார்.



கோவை பெண் ஓட்டுநர் ஷர்மிளாவுக்கு மநீம தலைவர் கமல்ஹாசன் கார் பரிசாக அளித்து, தொழில்முனைவராக பயணிக்க வாழ்த்து தெரிவித்தார்.

அதேபோல் கடந்த 23-ம் தேதி எம்பி கனிமொழி, ஷர்மிளா ஓட்டும் பேருந்தில் பயணம் செய்தார். ஆனால் அதன் பின்னர் ஷர்மிளா அந்த பேருந்து நிறுவனத்திலிருந்து பணியிலிருந்து நின்றுவிட்டார். இது பெரிதும் விவாதத்துக்குள்ளானது. இதையடுத்து ஷர்மிளாவுக்கு தேவையான உதவிகளையும், அவருக்கு பணியையும் வழங்க, தாம் ஏற்பாடு செய்வதாக கனிமொழி உறுதியளித்திருந்தார். இந்நிலையில் மநீம தலைவர் கமல்ஹாசன், ஷர்மிளாவுக்கு கார் ஒன்றை பரிசளித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கை: தமிழக அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் முதல் பெண் ஓட்டுநர் வசந்தகுமாரி, முதல் பெண் ஆம்புலன்ஸ் ஓட்டுநர் வீரலட்சுமிபோல, கோவையின் முதல் தனியார் பேருந்து ஓட்டுநராக இருந்தவர் ஷர்மிளா. பேருந்து ஓட்டுநராக சவாலான பணியை அவர் திறம்பட செய்து வந்தார்.

இந்நிலையில் ஷர்மிளா குறித்த சமீபத்திய விவாதங்கள் அறிந்து, மிகுந்த மனவேதனை அடைந்தேன். ஷர்மிளா ஓர் ஓட்டுநராக மட்டுமே இருந்துவிட கூடியவர் அல்ல. பல்லாயிரம் ஷர்மிளாக்களை உருவாக்க வேண்டியவர் என்பதே எனது நம்பிக்கை. எனவே கமல் பண்பாட்டு மையம் தனது பங்களிப்பாக ஒரு புதிய காரை, ஷர்மிளாவுக்கு வழங்கியிருக்கிறது. வாடகை கார் ஓட்டும் தொழில்முனைவராக தனது பயணத்தை ஷர்மிளா மீண்டும் தொடரவிருக்கிறார்.

அடக்கிவைக்கப்பட்ட பெண்கள் தங்கள் தடைகளை உடைத்து தரணி ஆளவருகையில், ஒரு பண்பட்ட சமூகமாக நாம் அவர்களின் பக்கம் நிற்க வேண்டும். ஷர்மிளாவுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகள். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# பிளஸ் 2 மாணவர்களுக்கு கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சி

● சென்னை

பிளஸ் 2 மாணவர்களுக்கு கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சியை ரிப்பன் மாளிகை வளாகத்தில் மேயர் நேற்று தொடங்கி வைத்தார்.

சென்னை மாநகராட்சி, இன்னர் வீல் கிளப் ஆஃப் மெட்ராஸ் இணைந்து மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் 12-ம் வகுப்பு மாணவ, மாணவிகளுக்கான வழிகாட்டுதல் நிகழ்ச்சியை ரிப்பன் மாளிகை வளாகத்தில் நேற்று நடத்தின. இந்நிகழ்ச்சியை மேயர் ஆர்.பிரியா தொடங்கி வைத்தார். தொடர்ந்து மாணவ, மாணவிகளுக்கு உயர்கல்விக்கான வழிகாட்டி புத்தகத்தை வழங்கினார்.

நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது: எந்த சூழ்நிலையிலும் தனித்துவத்தை காட்டுவது கல்வி மட்டுமே. பெண்களுக்கு கல்வி மிகவும் முக்கியம். நீங்கள் நன்றாக படிக்க வேண்டும், நல்ல நிலைக்கு வரவேண்டும் என்றுதான் உங்கள் பெற்றோர் கடினமாக உழைக்கிறார்கள். உங்களுக்கு ஏதாவது கேள்விகள் கேட்க வேண்டும் என்றாலோ, மனதில் ஏதாவது சந்தேகங்கள் இருந்தாலோ வெளிப்படையாக பேச வேண்டும். வழிகாட்டுதல் தொடர்பாக வெளியிடப்பட்டு உள்ள புத்தகம், உங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும். இந்த புத்தகத்தை படித்து உங்களுக்கு தேவையான துறையை தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். இவ்வாறு அவர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில், மாநகராட்சி ஆணையர் ஜெ.ராதாகிருஷ்ணன், துணை ஆணையர் (கல்வி) ஷரண்யா அறி, நிலைக்குழு தலைவர் (கல்வி) த.விசுவநாதன், கல்வி அலுவலர் சாந்தி, இன்னர் வீல் கிளப் நிர்வாகிகள் சந்தியா ஜெயச்சந்திரன், செவ்வந்தி சிங்காரம், அரசி பொன்மொழி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## அடையாறு புற்றுநோய் மருத்துவமனையின்

# இயக்குநர் செல்வலட்சுமி சென்னையில் காலமானார்

● சென்னை

அடையாறு புற்றுநோய் ஆராய்ச்சி மையத்தின் (மருத்துவமனை) இயக்குநரும், கதிரியக்க புற்றுநோய் சிகிச்சை நிபுணருமான மருத்துவர் செல்வலட்சுமி கணேசராஜா (62) உடல்நலக் குறைவால் நேற்று காலமானார்.



செல்வலட்சுமி கணேசராஜா

சென்னை அடையாறு புற்றுநோய் ஆராய்ச்சி மையத்தில் வைக்கப்பட்டிருந்த அவரது உடலுக்கு பல்வேறு தரப்பினரும் அஞ்சலி செலுத்தினர். பின்னர் பிற்பகலில் பெசன்ட் நகர் மின் மயானத்தில் அவரது உடல் தகனம் செய்யப்பட்டது. பெண்களிடையே ஏற்படும் பேறு கால புற்றுநோய் மற்றும் மார்பகப் புற்றுநோய்களைத் தடுப்பதற்காக முழுவதுமாக தன்னை ஈடுபடுத்திக் கொண்டு மருத்துவ சேவை ஆற்றிய செல்வலட்சுமியின் மறைவுக்கு மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவ மாணவர்கள், அரசியல் பிரமுகர்கள், சமூக ஆர்வலர்கள் பலரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

சென்னையில் கடந்த 1961-ல் பிறந்த செல்வலட்சுமி புற்றுநோய் மருத்துவத் துறையில் 30 ஆண்டுகளுக்கும் மேலாகச் சேவையாற்றியுள்ளார். அடையாறு புற்றுநோய் ஆராய்ச்சி மையத்தின் தலைவராக இருந்து மறைந்த மருத்துவர் வி.சாந்தாவின் வழிகாட்டுதலுடன் மார்பகப் புற்றுநோய், பேறு கால புற்றுநோய் சிகிச்சைகளில் பல்வேறு புதிய நுட்பங்கள், பரிசோதனைகள், தடுப்பு முறைகளை செல்வலட்சுமி நன்கு கற்று நோயாளிகளுக்கு மருத்துவ சேவையாற்றினார். அவரது சேவையைப் போற்றும் வகையில் தமிழ்நாடு டாக்டர்எம்ஜிஆர் மருத்துவப் பல்கலைக்கழகம் கடந்த 2012-ல் சிறந்த மருத்துவர் விருதை செல்வலட்சுமிக்கு வழங்கி கவுரவித்துள்ளது. செல்வலட்சுமிக்கு ஒரு சகோதரர் மற்றும் சகோதரி உள்ளனர்.


**ஆவடி மாநகராட்சி, திருவள்ளூர் மாவட்டம்**

பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

(அரசாணை எண்.92 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறைநாள் 03.07.2007ன் படி பிரசுரிக்கப்பட்டது)

ந.க.எண்.11740/2019/அ1 நாள்:22.06.2023

இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.35, என்.எம்.சாலையில் மாநகராட்சி கட்டிடம் அருகில் கட்டப்பட்டுள்ள 68 கடைகளில் வாடகை செலுத்தாமல் நிலுவை வைத்துள்ள 29 கடைகளுக்கு தனித்தனியாக குத்தகைக்கு ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு மாத வாடகைக்கு அனுபவித்து கொள்ளும் உரிமையின்கீழ் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் ஆவடி மாநகராட்சியில் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கையில் காணும் பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டு 12.07.2023ம் தேதி புதன்கிழமை காலை 11.00 மணி வரை ஆவடி மாநகராட்சியில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது. மேலும் ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 11.07.2023ம் தேதி செவ்வாய் கிழமை மாலை 3.00 மணிக்குள்ளாக மாநகராட்சி அலுவலகத்தில் உரிய தொகையை செலுத்தி பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது. இதே இனங்களுக்கு (12.07.2023) அன்றைய தினம் காலை 11.30 மணிக்கு மாநகராட்சி ஆணையர் அல்லது அதிகாரம் பெற்ற அலுவலரால் பொது ஏலம் நடத்தப்பெறும். ஏலம் முடிவுற்ற பின்னர் ஒப்பந்த பெட்டி திறக்கப்படும்.

ஏல அறிக்கையில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டும் இதர விதிகளுக்குட்பட்டும் உரிய டேவணித் தொகையினை வங்கி வரைவோலை (DD) இணைத்து வழங்க வேண்டும். ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகளில் கலந்து கொள்பவர்கள் ஏலத்திற்கு தனியாகவும், ஒப்பந்தப்புள்ளிக்கு தனியாகவும் வைப்புத் தொகையினை வங்கி வரைவோலை எடுத்து (DD) 11.07.2023 அன்று மாலை 4.00 மணிக்குள் மாநகராட்சி அலுவலகத்தில் வழங்க வேண்டும். இத்தொகையினை செலுத்தி அத்தாட்சிப்பெற்ற நபர்கள் மட்டும் பொது ஏலத்தில் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

குத்தகை தொடர்பான சிறப்பு மற்றும் பொது நிபந்தனைகள் மற்றும் இதர விவரங்களை தெரிந்து கொள்ள அலுவலக வேலை நாட்களில் மாநகராட்சி அலுவலகத்தில் வருவாய் பிரிவில் கேட்டு தெரிந்து கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி ஏலம் குறித்து ஏலம் / ஒப்பந்தப்புள்ளி தள்ளிவைக்கவோ ஏலத்தினை / ஒப்பந்தப்புள்ளியினை இரத்து செய்யவோ ஆணையருக்கு முழு அதிகாரம் உண்டு.

| வ. எண். | குத்தகை இன விவரம் | ஒப்பந்தப்புள்ளி படிவம் தொகை | டேவணித் தொகை |
|---|---|---|---|
| 1. | என்.எம்.ரோடு ஆவடி மாநகராட்சி புதிய கட்டிடம் அருகில் அமைந்துள்ள ஆவடி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி மற்றும் பொது நிதியில் கட்டப்பட்டுள்ள 68 கடைகளில் வாடகை செலுத்தாமல் நிலுவை வைத்துள்ள 29 கடைகள் (கடை எண் 3,5,10,11,20,21,22,23,24,26,28,33,35,36,37,40,41, 43,47,50, 51,52,53,54,56,57,58,63,64) | ரூ.312/- (ஒரு கடைக்கு) | ரூ.1,00,000/- (ஒரு கடைக்கு) |

செ.ம.தொ.இ/722/வரைகலை/2023 "சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்" ஆணையர், ஆவடி மாநகராட்சி



**வீல்ஸ் இந்தியா லிமிடெட்**

CIN : L35921TN1960PLC004175

பதிவு பெற்ற அலுவலகம் : எண். 21 பட்டுல்லாஸ் ரோடு, சென்னை 600 002, தொலைபேசி : (044) 28522745

தொழிற்சாலை : பாடி, சென்னை – 600 050, தொலைபேசி : (044) 26234300 / 26258511

மின்னஞ்சல் : investorservices@wheelsindia.com இணையதளம் : www.wheelsindia.com

**அறிவிப்பு**

வீல்ஸ் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் 64-வது வருடாந்திர பொதுக்கூட்டம் **ஜூலை 19, 2023 புதன்கிழமை அன்று இந்திய நேரப்படி காலை 10.15 மணிக்கு** வீடியோ கான்பரன்ஸ் (VC) / இதர ஆடியோ விஷுவல் முறையில் (OAVM) நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது. நிறுவனங்கள் சட்டம், 2013 பொருந்தக்கூடிய அனைத்து விதிகள் / விதிமுறைகளுக்கும் இணங்க மற்றும் SEBI (பட்டியலிடும் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015 கார்ப்பரேட் விவகாரங்கள் அமைச்சகம் (MCA) மற்றும் இந்திய பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை வாரியம் (SEBI) ஆகியவற்றால் பொருந்தக்கூடிய அனைத்து சுற்றறிக்கைகளின்படி, ஏப்ரல் 08, 2020, ஏப்ரல் 13, 2020, மே 05, 2020, ஜனவரி 13, 2021, மே 05, 2022 தேதியிட்ட சுற்றறிக்கைகள் டிசம்பர் 28, 2022 உடன் படிக்கப்பட்டது. (''எம்சிஏ சுற்றறிக்கைகள்'' என குறிப்பிடப்படுகிறது) மற்றும் செபியால் வெளியிடப்பட்ட மே 13, 2022 மற்றும் ஜனவரி 5, 2023 தேதியிட்ட சுற்றறிக்கை மற்றும் பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகள் இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ளன.

மேற்கண்ட சுற்றறிக்கைகளுக்கிணங்க, 2022-23ம் நிதியாண்டுக்கான 64–வது வருடாந்திர பொதுக்கூட்ட நோட்டீஸ் மற்றும் வருடாந்திர அறிக்கை, ஜூன் 27, 2023 அன்று எலக்ட்ரானிக் முறையில் அனுப்பப்படும். அனைத்து பங்குதாரர்களுக்கும் கம்பெனியில் உறுப்பினர்கள் ரிஜிஸ்தர் / நேஷனல் செக்யூரிட்டிஸ் டெபாசிட்டரி லிமிடெட் (NSDL) / மத்திய டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட் (CDSL) ஆகியவற்றில் ஜூன் 23, 2023 அன்று வணிக நேரம் முடியும் நேரத்தில் யார் யார் தங்கள் இ–மெயில் முகவரியை கம்பெனி / டெபாசிட்டரி பங்கேற்பாளர்களிடம் உள்ளதோ அவர்களுக்கு இவை அனுப்பப்படுகிறது. கம்பெனியின் நோட்டீஸ், 2022-23ம் ஆண்டுக்கான வருடாந்திர கணக்கு அறிக்கை ஆகியவை கம்பெனியின் இணையதளமான www.wheelsindia.com, தேசிய ஸ்டாக் எக்சேஞ் ஆப் இந்தியா லிமிடெட் (NSE) www.nseindia.com இணையதளத்திலும் காணலாம். இந்த ஆண்டு பொதுக்கூட்டத்தில் மெம்பர்கள் வீடியோ கான்பரன்ஸ் / இதர ஆடியோ விஷுவல் முறையில் பங்கேற்கலாம். ஆண்டு பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்கான குறிப்புகள் நோட்டீசில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வீடியோ கான்பரன்ஸ் / இதர ஆடியோ விஷுவல் முறையில் ஆஜராகி உள்ள மெம்பர்கள் எண்ணிக்கை 2013 கம்பெனிகள் சட்டம் பிரிவு 103ன் கீழ் 'கோரம்' காரணத்துக்காக கணக்கிடப்படும்.

கம்பெனிகள் சட்டம் பிரிவு 108-ன்படி அதற்கேற்பவும் இதற்கிணங்க கம்பெனிகள் (நிர்வாகம் மற்றும் நிர்வாக முறை) 2014 விதிகள்படியும், கம்பெனியானது எலக்ட்ரானிக் முறையில் வாக்களிக்கும் வசதி வழங்கி உள்ளது. (ரிமோட் இ–வாக்களிப்பு) இந்த வணிகத்தை சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட் (CDSL) மெம்பர்கள் எலக்ட்ரானிக் மூலம் வாக்களிக்கலாம். கூடுதலாக எலக்ட்ரானிக் முறையில் வாக்களிக்க பொதுக்கூட்டத்தின்போது வசதி ஏற்படுத்தப்படும். ஏற்கனவே இதுவரை ரிமோட் இ–வாக்களிப்பு செய்யாதவர்கள் பொதுக்கூட்டத்தில் தங்களின் இ–வாக்கினை அளிக்கலாம். ரிமோட் இ–வாக்களிப்பு மற்றும் இ–வாக்களிப்பு நடைமுறை நோட்டீசில் குறிப்பிடப்பட்டு உள்ளது.

வாக்குப்பதிவிற்கான உரிமை பெறும் நாள், அதாவது **ஜூலை 12, 2023** அன்று டெபாசிட்டரிகளால் பராமரிக்கப்படும் பதிவேடு மற்றும் உறுப்பினர்களின் பதிவிலும் உள்ள அங்கத்தினர்கள், தொலைவில் இருந்து மின்னணு மூலமும், வருடாந்திர பொதுக்கூட்டத்திலும் வாக்களிக்கும் உரிமை பெற்றுள்ளனர். எந்த ஒரு நபரும் வருடாந்திர பொதுக்கூட்ட நோட்டீஸ் அனுப்பப்பட்டபின் ஆனால் வாக்களிக்க உரிமைபெறும் கடைசி நாளான ஜூலை 12, 2023 தேதிக்கு முன் கம்பெனியின் பங்குகளை வாங்கி உறுப்பினரானால், கம்பெனியின் இணையதளமான www.wheelsindia.com மற்றும் தேசிய ஸ்டாக் எக்சேஞ் ஆப் இந்தியா லிமிடெட் (NSE) www.nseindia.com மற்றும் சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் லிமிடெட்டின் www.evotingindia.com இணையதளத்திலும் காணலாம்.

மின்னணு வாக்குப்பதிவு ஜூலை 16, 2023 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு துவங்கி (IST) ஜூலை 18, 2023 செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு (IST) முடிவடைகிறது. அதற்குப்பின் வாக்குப்பதிவு CDSL-ஆல் நிறுத்தப்படும்.

எஸ்.தனபால் & அசோசியேட்ஸ், ப்ராக்டிசிங் கம்பெனி செயலாளர்கள், தபால் வாக்கெடுப்பு மற்றும் மின்னனு வாக்குப்பதிவுக்கு செயல்முறை ஆராய்வாளராக நியமிக்கப்பட்டுள்ளார். தொலைவில் இருந்து மின்னனு முறையில் வாக்களித்த அங்கத்தினர்கள் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் பங்கு பெறலாம் ஆனால் அவர்கள் மறுபடியும் வாக்களிக்க முடியாது.

காகித வடிவில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் கம்பெனி / டெபாசிட்டரியிடம் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாதவர்கள் கீழ்க்கண்ட ஆவணங்களின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல்களை நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர் (RTA), அதாவது கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட்டின் மின்னஞ்சலான investor@cameoindia.com / agm@cameoindia.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பி வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பின் நகல்கள், 2022–23க்கான வருடாந்திர அறிக்கை மற்றும் மின்னனு வாக்குப்பதிவு உள்பட காணொளி காட்சி ("VC") மற்றும் இதர அங்கீகரிக்கப்பட்ட ஆடியோ விஷுவல் வழிமுறைகள் ("OAVM") மூலம் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் இணைவதற்கான விவரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

a. உங்களது பெயர், ஃபோலியோ எண், முழு முகவரி, பதிவு செய்ய வேண்டிய மின்னஞ்சல் முகவரியை குறிப்பிட்டு கையொப்பமிட்ட கோரிக்கை கடிதம்.

b. சுயசான்றளிக்கப்பட்ட நிரந்தர கணக்கு எண் (PAN) மற்றும்

c. உறுப்பினரின் பதிவு செய்யப்பட்ட முகவரிக்காக ஓட்டுனர் உரிமை / பாஸ்போர்ட் / வாக்காளர் அடையாள அட்டை / ஆதார் ஆகியவற்றின் சுயசான்றளிக்கப்பட்ட நகல்கள் ஆகியவை.

டிமேட் வடிவில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் தங்கள் மின்னஞ்சல் முகவரி / மின்னணு வங்கி விவரங்களை தங்கள் வைப்புத்தொகை பங்கேற்பாளர்களுடன் புதுப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

டிவிடெண்ட் ஏதேனும் உறுப்பினர்களால் அறிவிக்கப்பட்டால், அது ஆகஸ்ட் 17, 2023ந் தேதி அன்றோ, அதற்கு முன்னரோ வழங்கப்படும். எந்த ஒரு மெம்பருக்கும் கம்பெனி டிவிடெண்டை அல்லது வங்கி கணக்குக்கு எலக்ட்ரானிக் முறையில் அல்லது எந்த ஒரு முறையில் செலுத்த முடியாமல் போக மெம்பர் தனது வங்கி கணக்கு விவரத்தை பதிவு செய்யாத பட்சத்தில், கம்பெனியானது டிவிடெண்ட் வாரண்ட் / செக்கை அந்த உறுப்பினருக்கு விரைவில் அனுப்பி வைக்கப்படும்.

2020 நிதி சட்டப்படி, டிவிடெண்ட் வருவாய் பங்குதாரர்களுக்கு ஏப்ரல் 01, 2020 முதல் வரிக்கு உட்படுத்தப்படும். கம்பெனியானது வழங்கப்படும் டிவிடெண்ட் தொகைக்கு வருமானவரி சட்டம் 1961 (IT Act)ன்படி விகிதத்தில் வரி பிடித்தம் (TDS) செய்யப்பட்டு வழங்கப்படும்.

இருந்தாலும், இந்திய தனிநபர் பெறும் மொத்த டிவிடெண்ட் தொகை ரூ. 5,000/–க்குள் இருந்தால் 2023–24ம் நிதியாண்டு காலத்தில் பெறும் டிவிடெண்டுக்கு வரி பிடித்தம் செய்யப்பட மாட்டாது மற்றும் உறுப்பினர்கள் படிவம் 15G / படிவம் 15H (தனிநபர் 60 வயதானவர் அதற்கு மேற்பட்டவருக்கு பொருந்தும்) தாக்கல் செய்தாலும், வருமானவரி சட்டத்தில் குறிப்பிட்ட விதிகளுக்கு உட்பட்டதாகும். பொதுவாக TDS தேவைக்கு ஏற்ப செயல்பட, உறுப்பினர்கள் தங்கள் வீட்டு முகவரி, PAN, வருமானவரி சட்டப்படி எந்த பிரிவு ஆகியவற்றை டெபாசிட்டரி பங்கேற்பாளருக்கும் அல்லது காகித வடிவில் பங்கு வைத்திருந்தால், கம்பெனியின் RTA இ–மெயிலுக்கு அதன் இ–மெயில் முகவரியான investor@cameoindia.com / agm@cameoindia.comக்கு அனுப்ப வேண்டும். மேலும் விவரங்களுக்கு, மெம்பர்கள் ''டிவிடெண்ட் விநியோகிப்பதில் TDS பற்றிய தகவலை சரிபார்க்கவும்''. படிவம் 15G / படிவம் 15H இணையதள இணைப்பான https://investors.cameoindia.com மூலம் பதிவிறக்கம் செய்யலாம். இந்த பலனை பெற investor@cameoindia.com / agm@cameoindia.com என்ற மின்னஞ்சலுக்கு ஜூலை 12, 2023க்குள் அனுப்ப வேண்டும். மேலும் கம்பெனியின் RTA வழங்கியுள்ள இணைய இணைப்பு https://investors.cameoindia.com மூலம் படிவம் 15G / படிவம் 15H பதிவேற்றம் செய்யும் வசதி உள்ளது.

இது சம்பந்தமாக ஏதேனும் விளக்கம் தேவைப்பட்டால், நீங்கள் திருமதி. R. கோமளவள்ளி, மூத்த மேலாளர், M/s. கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட் (தொலைபேசி எண். 044 – 28460395) தொடர்பு கொள்ளலாம். கம்பெனியின் இணையதளமான https://wheelsindia.com/agm-updates/–ல் டிவிடெண்ட் வழங்கப்படுவதற்கு டிவிடெண்ட்க்கு TDS பிடித்தம் பற்றிய தகவல்களை உறுப்பினர்கள் பெறலாம்.

கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 91–ன்படி உறுப்பினர் பதிவேடு மற்றும் பங்கு மாற்றுப் புத்தகங்கள், வருடாந்திர பொதுக்கூட்டத்தில் டிவிடெண்ட் வழங்குவதற்காக, 13.07.2023 வியாழக்கிழமை முதல் 19.07.2023 புதன்கிழமை வரை (இரு நாட்கள் உட்பட) மூடப்பட்டிருக்கும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

எலக்ட்ரானிக் முறையில் வாக்களிப்பது சம்பந்தமாக எந்த ஒரு கோரிக்கை இருந்தாலும் அதை திரு. ராகேஷ் தல்வி, மேலாளர், (CDSL) சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட், A விங்க், 25வது மாடி, மாரத்தான் பியூச்சரக்ஸ், மபத்லால் மில் காம்பவுண்ட்ஸ், N.M.ஜோஷி மார்க், லோயர் பரேல் (கிழக்கு), மும்பை – 400013 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும் அல்லது இ–மெயில் மூலம் helpdesk.evoting@cdslindia.com என்பதற்கும் அல்லது இலவச கட்டணமில்லா எண்ணில் 1800225533 தெரிவிக்கலாம்.

இடம் : சென்னை
தேதி : 27.06.2023

இயக்குநர்கள் குழுவின் உத்தரவுப்படி
கே.வி. லக்ஷ்மி
கம்பெனி செயலாளர்



**டிவிஎஸ் மோட்டார் கம்பெனி லிமிடெட்** TVS

**பதிவு அலுவலகம் :** "சைதன்யா", எண்.12, காதர் நவாஸ் கான் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை 600 006
**இணையதளம் :** www.tvsmotor.com; **தொலைபேசி :** (044) 28332115, **தொலைநகல் :** (044) 28332113
**மின்னஞ்சல் :** contactus@tvsmotor.com; **CIN :** L35921TN1992PLC022845

**31வது ஆண்டு பொதுக்கூட்டம் மற்றும் மின்னணு வாக்குப்பதிவு பற்றிய அறிவிப்பு**

கம்பெனி விவகாரங்கள் அமைச்சகம் மற்றும் செபியினால் அவ்வப்போது வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் மற்றும் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) விதிகள் 2015, அதன்கீழ் உள்ள விதிகள் மற்றும் கம்பெனிகள் சட்டம் 2013–ல் பொருந்தக்கூடிய விதிகளின்படி ஒரு பொதுவான இடத்தில் உறுப்பினர்கள் ஆஜர் ஆகாமல் காணொளி காட்சி ("VC") மற்றும் இதர அங்கீகரிக்கப்பட்ட ஒலி / காட்சி சார்ந்த வழிமுறைகள் ("OAVM") மூலமாக கம்பெனியின் 31–வது வருடாந்திர பொதுக்கூட்டம் **திங்கட்கிழமை, ஜூலை 24, 2023, அன்று மதியம் 3.30 மணிக்கு (இந்திய நேரப்படி)** பொதுக்கூட்டம் பற்றிய மே 4, 2023 தேதியிட்ட அறிவிப்பில் உள்ள தீர்மானங்களை நிறைவேற்ற நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது. மேலும், நிறுவனம் கூடுதலாக பொதுக்கூட்டத்தின் நடவடிக்கைகளை ஒருவழி நேரடி வெப்காஸ்ட் மூலம் வழங்கும்.

இந்த ஆவணங்கள் நிறுவனத்தின் இணையதளம் (www.tvsmotor.com) பிஎஸ்இ லிமிடெட் (www.bseindia.com) மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்சேஞ்ச் ஆப் இந்தியா லிமிடெட் (www.nseindia.com) இணையதளத்திலும் நேஷனல் செக்யூரிட்டிஸ் டெபாசிட்டரி லிமிடெட் (NSDL) (தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு வசதிக்காக அங்கீகரிக்கப்பட்ட முகவர்) இணையதளத்திலும் (www.evoting.nsdl.com) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. மேற்குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கைகளுக்கு இணங்க, நிறுவனத்திடமோ / டெபாசிட்டரிகளிடமோ தங்கள் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்த அனைத்து உறுப்பினர்களுக்கும் பொதுக்கூட்டம் பற்றிய அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கை மின்னஞ்சல் மூலம் ஜூன் 26, 2023 அன்று அனுப்பப்பட்டுள்ளது.

வரையறுக்கப்பட்ட நாளான திங்கட்கிழமை, ஜூலை 17, 2023 அன்று காகித வடிவில் / டிமேட் முறையில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் 31–வது ஆண்டு பொதுக்கூட்டம் பற்றிய அறிவிப்பில் உள்ள சாதாரண மற்றும் சிறப்பு வர்த்தகங்கள் குறித்தான தீர்மானங்களுக்கு மின்னணு முறையில் அல்லது NSDL (தொலைதூர மின்னணு வாக்களிப்பு) மூலம் தங்கள் வாக்கை பதிவு செய்யலாம்.

அனைத்து அங்கத்தினர்களுக்கும் இதன் மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால்;

1. ஆண்டு பொதுக்கூட்ட அறிவிப்பின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய சாதாரண மற்றும் சிறப்பு வர்த்தகங்கள் தொலைதூர மின்னனு வாக்குப்பதிவு அல்லது மின்னணு வாக்குப்பதிவு மூலம் செயலாக்கப்படும்.
2. மின்னனு மூலம் வாக்குப்பதிவு ஆரம்பிக்கும் நாள் மற்றும் நேரம்: வெள்ளிக்கிழமை, ஜூலை 21, 2023 காலை 9 மணி (இந்திய நேரப்படி).
3. மின்னனு மூலம் வாக்குப்பதிவு முடிவடையும் நாள் மற்றும் நேரம்: ஞாயிற்றுக்கிழமை, ஜூலை 23, 2023 மாலை 5 மணி (இந்திய நேரப்படி).
4. மின்னனு மூலம் வாக்குப்பதிவு ஞாயிற்றுக்கிழமை, ஜூலை 23, 2023 மாலை 5 மணிக்கு (இந்திய நேரப்படி) மேல் அனுமதிக்கப்பட மாட்டாது.
5. மேலே குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்திற்குப்பின் தொலைவில் இருந்து வாக்களிக்க இயலாது. அங்கத்தினர்கள் தீர்மானத்தின் மீது ஒருமுறை வாக்களித்தப்பின் பின்னர் அதை மாற்ற முடியாது.
6. தொலைதூர மின்னனு வாக்குப்பதிவு மூலமாக அல்லது ஆண்டு பொதுக்கூட்டத்தில் மின்னனு மூலமாக வாக்களிக்கும் வாக்காளர் பட்டியல் ஜூலை 17, 2023 அன்று வரையறுக்கப்படும்.
7. எந்த ஒரு நபரும் அறிவிப்பு அனுப்பப்பட்டபின் வரையறுக்கப்பட்ட தேதிக்கு முன் கம்பெனியின் பங்குகளை வாங்கி உறுப்பினரானால், evoting@nsdl.co.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது corpserv@integratedindia.in / sriramS@integratedindia.inல் விண்ணப்பம் செய்து உள்நுழைய அடையாளச் சொல் (login ID) மற்றும் கடவுச்சொல் (Password) ஆகியவற்றை கேட்டுப் பெறலாம். இருப்பினும் அவர்கள் NSDLல் தொலைவில் இருந்து வாக்களிக்க ஏற்கனவே பதிவு செய்து இருந்தால், அவர்கள் தங்கள் தற்போதைய அடையாளச் சொல் மற்றும் கடவுச்சொல்லை பயன்படுத்தி வாக்களிக்கலாம்.
8. தொலைவில் இருந்து மின்னனு முறையில் வாக்களிக்க இயலாத அங்கத்தினர்கள் மின்னனு மூலமாக ஆண்டு பொதுக்கூட்டத்தில் வாக்களிக்க வசதிகள் செய்யப்பட்டுள்ளன.
9. தொலைவில் இருந்து மின்னனு முறையில் வாக்களித்த அங்கத்தினர்கள் ஆண்டு பொதுக்கூட்டத்தில் பங்கு பெறலாம் ஆனால் அவர்கள் மறுபடியும் வாக்களிக்க முடியாது.
10. வரையறுக்கப்பட்ட நாளன்று உறுப்பினர் பதிவேடு அல்லது பயனாளிகள் பதிவேட்டில் உள்ள அங்கத்தினர்கள் மட்டுமே தொலைவில் இருந்து மின்னனு முறையில் அல்லது ஆண்டு பொதுக்கூட்டத்தில் மின்னனு முறையில் வாக்களிக்க முடியும்.
11. திரு.K.ஸ்ரீராம், தொழில் முறை கம்பெனி செயலாளர் அவர்களை மின்னணு வாக்குப்பதிவு மற்றும் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் வாக்குப்பதிவு ஆகியவை நேர்மையான மற்றும் ஒளிவுமறைவு இல்லாத முறையில் நடைபெற ஆய்வாளராக கம்பெனியால் நியமிக்கப்பட்டுள்ளார்.
12. வாக்களிக்கும் முறையில் ஏதேனும் சந்தேகமிருந்தால், உறுப்பினர்களுக்கான அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் பகுதி அல்லது தொலைவில் இருந்து வாக்களிக்கும் முறை பற்றிய சிறு குறிப்பேடு ஆகிய பகுதிகளை www.evoting.nsdl.com என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து தெரிந்து கொள்ளலாம் அல்லது 1800-1020-990 மற்றும் 1800-2244-30 என்ற இலவச தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம். மின் வாக்குப்பதிவு மீது சந்தேகம் மற்றும் குறைகள் இருந்தால் அவற்றை Ms. பல்லவி மாத்ரே, மேலாளர் – NSDL, மின்னஞ்சல் : evoting@nsdl.co.in அவர்களிடம் மேற்குறிப்பிட்ட முகவரியில் இருந்து தெரிந்து கொள்ளவும்.
13. கம்பெனி / டெபாசிட்டரியிடம் மின்னஞ்சல் முகவரிய பதிவு செய்யாத உறுப்பினர்கள் கீழ்க்கண்ட ஆவணங்களின் நகல்களை corpserv@integratedindia.in என்ற முகவரிக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பி வருடாந்திர பொதுக்கூட்ட அறிக்கையின் நகல்கள், வருடாந்திர அறிக்கை மற்றும் மின்னணு வாக்குப்பதிவு மூலம் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் இணைவதற்கான விவரங்களை மின்னஞ்சல் மூலம் பெற்றுக் கொள்ளலாம். உங்களது பெயர், ஃபோலியோ எண், முழு முகவரி, பதிவு செய்ய வேண்டிய மின்னஞ்சல் முகவரியை குறிப்பிட்டு கையொப்பமிட்ட கோரிக்கை கடிதம், பங்கு சான்றுகளின் நகல் (முன் மற்றும் பின் பக்கம்), சுய சான்றளிக்கப்பட்டு ஸ்கேன் செய்யப்பட்ட பான் மற்றும் கம்பெனியிடம் பதிவு செய்யப்பட்ட முகவரிக்காக ஓட்டுனர் உரிமை / பாஸ்போர்ட் / வங்கி அறிக்கை / ஆதார் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை சுயசான்றளிக்கப்பட்டு, ஸ்கேன் செய்யப்பட்ட நகலை இணைக்க வேண்டும்.
14. கம்பெனியிடம் ஏற்கனவே தங்களது மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாத உறுப்பினர்களுக்கு அவற்றை பதிவு செய்வது குறித்து கம்பெனியானது மே 24, 2023 அன்று ஒரு அறிவிப்பை வெளியிட்டது.
15. சரியான நேரத்தில் தகவல்களை பெற மின்னஞ்சல் முகவரியை கம்பெனி மற்றும் டெபாசிட்டரி பார்ட்டிசிபெண்ட்டுகளுடன் பதிவு செய்து கொள்ளவும்.

சென்னை
ஜூன் 26, 2023

இயக்குனர் குழு ஆணையின்படி
K.S. ஸ்ரீநிவாஸன்
கம்பெனி செயலாளர்



**தமிழ்நாடு அரசு**

**ஆற்றூர் பேரூராட்சி – கன்னியாகுமரி மாவட்டம்**

ந.க.எண். 60/2022/அ1 மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாள் : 26.06.2023

கன்னியாகுமரி மாவட்டம், ஆற்றூர் பேரூராட்சியில் **Atal Mission for Rejuvenation and Urban Transformation 2.0 (AMRUT 2.0) 2022-23** திட்டத்தின் கீழ் ரூ. 906.07 இலட்சம் (தொள்ளாயிரத்து ஆறு இலட்சத்து ஏழாயிரம் ரூபாய் மட்டும்) மதிப்பீட்டில் குடிநீர் விநியோக திட்டம் மேம்படுத்துதல் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் பதிவு பெற்ற மற்றும் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து **20.07.2023 வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை** (அலுவலக கடிகாரப்படி) இப்பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களால் இ–டெண்டரிங் முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் அன்று **மாலை 3.30 மணிக்கு** வருகை புரிந்துள்ள ஒப்பந்தகாரர்களின் முன்னிலையில் செயல் அலுவலர் அல்லது அவரால் அதிகாரம் பெற்றவர்களால் திறக்கப்படும்.

ஒப்பந்தப்புள்ளி படிவம் வேண்டுவோர் **20.07.2023 –ம் தேதி வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை https://tenders.tn.gov.in** என்ற இணைய தளம் மூலம் E–Token / Digital Signature Card உபயோகித்து இலவசமாக பெற்றுக் கொள்ளலாம். இதர விவரங்களை பேரூராட்சி அலுவலகத்தில் வேலை நாட்களில் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ./ 3257 /ஒப்பந்தப்புள்ளி/2023

செயல் அலுவலர்
ஆற்றூர் பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம்

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"